நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள்.28.02.2020

2020 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28.02.2020ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.வீ.குணசேகர்.B.E,
ஆணையாளர் (கூ.பொ) மற்றும் தனிஅலுவலர்

**1)** இந்நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஆணையாளர் கூ.பொ அவர்களின் பிப்ரவரி 2020ம் மாத மாதாந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.
**( ந.க.எண்.2146/2020/சி1).**
**தீர்மான எண் : 48** பார்வையிட்டு பதியப்பட்டது.

**2)**இந்நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை கழிவு நீர் உந்து நிலையத்திற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்திற்கு **2020–2021**ம் ஆண்டிற்கான புதுப்பித்தல் கட்டணம் **ரூ.69006/–**ஐ செலுத்த வேண்டியுள்ளதால் அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 939 /2020/இ1**
**தீர்மான எண் : 49** அனுமதிக்கப்பட்டது.

**3)** போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான வாகன எண்.TN60V1693ல் உள்ள நான்கு டயர்களும் தேய்மானம் ஏற்பட்டு வாகனம் ஓட்டுவதற்கு இடையூறாக உள்ளது. மேற்படி வாகனத்திற்கு புதிதாக நான்கு டயர்கள் வாங்கி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் **ரூ.21,500/–**ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி வாகனத்தின் முக்கியத்துவம் கருதி **26.02.2020**ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Sundar Tyres, Theni | : | ரூ.23,200/– |
| 2. | Vishwak Tyrres, Bodinayakanur | : | ரூ.21,600/– |
| 3. | Fathuma Car Care, Theni | : | ரூ.21,500/– |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி வழங்கிய Fathuma Car Care, Theni விலைப்புள்ளியினை ஏற்று விநியோகம் செய்யவும், பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.2635/2019/இ1)**
**தீர்மான எண் : 50** அனுமதிக்கப்பட்டது.

**4)** போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சித்திட்டப் பணிகள் மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் வழங்கிய விபரங்களுடன் தொழில் மலரின் வெளியிட்டமைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு உரிய தொகையை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **நாளிதழ்** | **தொகை** |
|---|---|---|
| 1 | பிற்பகல் | ரூ.7,350/– |
| 2 | அரசியல் அதிர்வு | ரூ.9,800/– |
| 3 | கிங் மேக்கர் | ரூ.9,800/– |
| | **மொத்தம்** | **ரூ.26950** |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.4509/2019/இ1)**
**தீர்மான எண் : 51** அனுமதிக்கப்பட்டது.

5) போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சித்திட்டப் பணிகள் மற்றும் பொங்கல் சிறப்பு மலரின் வெளியிட்டமைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி ந.க.எண்.203/செ.ம.தொ.அ/2019/நாள்.24.12.2019 அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு மாலைமலர் நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கு உரிய தொகை ரூ.12500/–ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4509/2019/இ1)**

**தீர்மான எண் : 52** அனுமதிக்கப்பட்டது.

6) நகராட்சி நிர்வாக ஆணையாளர் அலுவலக கட்டிடம் புதியது கட்டிட (Urban Administrative Building Society) நகராட்சி தரத்திற்கு ஏற்ப (Grade - Wise) நகராட்சி பங்குத் தொகை செலுத்திட அறிவுறுத்தி, அரசாணை நிலை எண்.104 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.10.2013 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.30322/2012/E3. நாள்.03.03.2016, 14.03.2016, 26.07.2017, 13.02.2018, 08.03.2018, 15.05.2019 மற்றும் 15.02.2020 வாயிலாக கீழ்க்கண்ட விபரப்படி தொகை செலுத்திட உத்திரவிடப்பட்டுள்ளது.

| வரிசை எண். | தவணை விவரம் | தொகை ரூ. இலட்சத்தில் | செலுத்தப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | முதல் தவணை | 9.00/– | 20.06.2014 |
| 2 | 2வது தவணை | 12.60/– | 17.03.2016 |
| 3 | 3வது தவணை | 4.61/– | 07.08.2017 |
| 4 | 4வது தவணை | 3.00/– | 20.02.2020 |

மேற்கூறிய விபரங்களின்படி, நகராட்சி பங்குத் தொகையாக (Urban Administration) Building Society, Acccount Number.33476552490 State Bank Of India, Chepack, Chennai-5–க்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தப்பட்டு விட்டது. மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்கூறிய அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவின்படி, நகர் நிர்வாக கட்டிடம், சென்னையில் புதியதாக கட்டிடம் கட்டிட, நகராட்சி பங்குத் தொகையாக நகராட்சியின் தரத்திற்கு ஏற்ப (Grade Wise) – நான்கு தவணைகளாக (9.00+12.60+4.61+3.00) (Urban Administration Building Society), செலுத்தியதை மன்றத்தில் முன்அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண்.1002/2016/பி1)**

**தீர்மான எண் : 53** அனுமதிக்கப்பட்டது.

7)இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.முனியாண்டி த/பெ குருவன் என்பவர், தான் கேங்கூலியாக பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யவும் மற்றும் பணப்பலன்கள் வழங்கக்கோரி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த WP(MD)No:16289 of 2014 வழக்கிற்கு, திரு.எம்.கருப்பசாமி பாண்டியன், அரசு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை அவர்களின் 28.01.2020 ஆம் தேதிய கடிதத்தில் மேற்படி வழக்கிற்கு, வழக்கு கட்டணமாக (Legal Fee) ரூ.9500/–வழங்க கோரியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.6394/2014/எச்1)**

**தீர்மான எண் : 54** அனுமதிக்கப்பட்டது.

8)இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து ஒய்வு பெற்ற திரு.முனியாண்டி த/பெ குருவன் என்பவர், தான் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யவும் மற்றும் பணப்பலன்கள் வழங்கக்கோரி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த WP(MD)No:16289 of 2014 வழக்கின் 23.01.2020 ஆம் தேதிய தீர்ப்புரை திரு.முனியாண்டி த/பெ குருவன் என்பவருக்கு சாதகமாக வரப்பெற்றுள்ளது. திரு.எம்.கருப்பசாமி பாண்டியன், அரசு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை அவர்களின் 26.02.2020 ஆம் தேதிய கடிதத்துடன் மேற்படி வழக்கின் தீர்ப்புரையினை இணைத்து வழக்கு கட்டணமாக (Legal Fee) ரூ.9500/–வழங்க கோரியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு :–**</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.6394/2014/எச்1)**
**தீர்மான எண் : 55** அனுமதிக்கப்பட்டது.

9) இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களாக பணிபுரியும் திரு.பாலகிருஷ்ணன் மற்றும் 3 நபர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கில் மேற்படியாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளதில் மேல்முறையீடு மற்றும் மறுசீராய்வு (Rev.Appln 53 of 2019) நகராட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டதிலும் திரு.பாலகிருஷ்ணன் மற்றும் 3 நபர்களுக்கு சாதகமாக 24.01.2019 ல் தீர்ப்பாகியுள்ளது. அதன்மீது, உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்வது குறித்து திரு.I.கணேசன், அரசு வழக்கறிஞர் டெல்லி உச்சநீதிமன்றம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி வழக்கறிஞரின் 13.01.2019 ஆம் தேதிய கடிதத்தில் வழக்கு தொடர்பான ஆவணங்களை ஆங்கிலத்தில் மொழிமாறுதல் செய்து வழங்க கோரியுள்ளார். அதன்படி, இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:2760/2012/எச்1 நாள்:10.02.2020ல், திரு.B.R.பாலமுரளி, அரசு வழக்கறிஞர், போடிநாயக்கனூர் அவர்களிடம் கோரியதன்படி, மேற்படி ஆவணங்களை மொழி மாறுதல் செய்தமைக்கு 25.02.2020 ஆம் தேதிய கடிதத்தில் .ரூ.5000/– கட்டணமாக கோரியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு :–**</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.2760/2012/எச்1)**
**தீர்மான எண் : 56** அனுமதிக்கப்பட்டது.

10) இந்நகராட்சியில் பேட்டரியால் இயங்கும் வாகனம் (BOV) 34 எண்ணம் சிறு சிறு பழுது பணிகளை சரி செய்ய ஆண்டு பராமரிப்பு செய்வதற்கு 27.02.2020–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. M/s.Unas e Rickshaws,
   Karaikudi.
2. M/s.Bhagavathi Elect Rickshaws,
   Madurai.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் சரிபார்க்கப்பட்டு, தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் பேட்டரியால் இயங்கும் வாகனம் (BOV) 34 எண்ணம் ஆண்டு பராமரிப்பு பணி | 7.00/– | 1.M/s.Unas e Rickshaws, Karaikudi. | ரூ. 6,12,000 |
| | | | 2. M/s.Bhagavathi Elect Rickshaws, Madurai | ரூ. 7,34,400 |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Unas e Rickshaws, Karaikudi. ஒப்பந்ததாரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் இப்பணிக்கான ஆகும் செலவினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்:377/2020 /இ1)**
**தீர்மான எண் : 57** குறைந்த ஒப்பந்தப்புள்ளிஅனுமதிக்கப்பட்டது.

**11)** போடிநாயக்கனூர் நகராட்சி சிஸ்கோஸ் உற்பத்தி மற்றும் பொறியியல் தொழில் கூட்டுறவு சங்கத்தின் மூலம் பழைய ஆடுவதை கூடத்தில் கடைகள் கட்டி முடிக்கப்பட்ட பணிக்கு காசோலை வேண்டி இந்நகராட்சி சார்பாக சென்னை உயர் மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.WP(MD)No.11001/2019 தொடரப்பட்டுள்ளது. இந்நகராட்சி நியமன அரசு வழக்கறிஞர், திரு.எம். கருப்பசாமிபாண்டியன் என்பவர் வாதுரை கட்டணமாக ரூ.9500/– வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் வழக்கறிஞர்க்கு வழங்கவும், மேற்படி செலவினத் தொகையினை 2019–20 ம் ஆண்டு வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.3543/2012/இ1)**
**தீர்மான எண் : 58** அனுமதிக்கப்பட்டது.

**12)** இந்நகராட்சிக்குட்பட்ட சர்வே வார்டு –2, பிளாக் எண்–3, சர்வே எண்–151/2 A, 149/2 A3–ல் உள்ள இடத்தினை அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி திருமதி வ.முத்துவீரசுருளியம்மாள் என்பவர் இந்நகராட்சிக்கு தான செட்டில்மெண்ட் அடிப்படையில் பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி பதிவு செய்து கொடுத்த தான செட்டில்மெண்ட் இடத்தில் திருமதி. வ.முத்துவீரசுருளியம்மாள் என்பவரின் உறவினர்களான திரு.டி.குமார் (எ) ஸ்ரீகுமார்பாண்டியன் என்பவர் தங்களுக்கு பாத்தியம் உள்ளது எனக் கோரி தேனி மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.25/2016–என வழக்கு தொடரப்பட்டு, தற்போது வரை நிலுவையில் உள்ள நிலையில், திருமதி. வ.முத்துவீரசுருளியம்மாள் க/பெ.(லேட்).வடமலைமுத்து சீலராஜபாண்டிய நாயக்கர் என்பவர் இந்நகராட்சிக்கு தான செட்டில்மெண்ட் அடிப்படையில் பதிவு செய்து கொடுத்துள்ள இடத்தில் நகராட்சியினர் அடிப்படை வசதிகள் செய்து தர காலதாமதம் செய்து வருவதாகக் கோரி, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குஎண் ( W.P.(MD).No.26848/2019 ) 4வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக எதிர்வாதுரை தாக்கல் செய்யவும், வாதிடவும் வாதுரைக் கட்டணமாக ரூ.9500/–ஐ வழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.வி.ஜெயப்பிரகாஷ்நாராயணன் அவர்களிடமிருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி செலவினத் தொகையினை 2019–2020 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு :–** அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.5905/2019/எப்1.)**
**தீர்மான எண் : 59** அனுமதிக்கப்பட்டது.

**13)** மனுதாரர் திரு.கமல்பாரத், த/பெ. ஸ்ரீமதுரபிரசாத் மற்றும் திருமதி.க.அர்ச்சனா, க/பெ.கமல்பாரத் என்பவர்கள் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33, புதுக்காலனி தெரு எண்.1 மற்றும் புதுக்காலனி தெரு எண்.6,7,8 –ல் சர்வே வார்டு –7 ; பிளாக் எண்–3; நகரளவு எண்கள்–52; 57/1A; 57/1D;58; 59; 60; 91; 92/1; 96/1; 97/3A; 97/3C; மற்றும் 57/2; 97/2; 97/4-ல் கட்டுப்பட்டுள்ள 36420.5 சதுர மீட்டர் அளவுள்ள இடத்தினை குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக உத்தேசித்துள்ளதாகவும், மேற்படி நிலமானது அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விவசாயப் பயன்பாட்டிற்கான நில உபயோகத்தில் அமைந்துள்ளதால், அதனை குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக மாற்றம் செய்ய கோரியுள்ளார். அதனடிப்படையில் கடந்த 15.01.2020 அன்று தமிழ் நாளிதழிலும் மற்றும் 16.01.2020 அன்று ஆங்கில நாளிதழிலும் 30 தினங்களில் பொது மக்கள் தங்களது ஆட்சேபனைகளை தெரிவிக்க விளம்பரம் மேற்கொள்ளப்பட்டதில். எவ்வித ஆட்சேபனையும் வரப்பெறவில்லை. எனவே, அன்னாரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மனுதாரின் 36420.5 சதுர மீட்டர் அளவுள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விவசாய நில உபயோகத்தில் அமைந்துள்ளது. மனுதாரின் இடத்திற்கு கிழக்கு பக்கம் 9.15 மீட்டர் அகல புதுக்காலனி தெரு எண். 6, 7, 8 –க்கு உரிய சாலையும், தெற்கு பக்கம் 9.10 மீட்டர் அகல புதுக்காலனி தெரு எண்–1க்குரிய சாலையும் அணுகு சாலையாக உள்ளது. மேற்படி இடத்தில் எவ்வித விவசாயமும் செய்யப்படாமல் தரிசாக உள்ளது. எனவே, விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக மாற்ற அரசின் ஒப்புதல் பெற்று மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.5984/2019/எப்1 )**
**தீர்மான எண் : 60** அனுமதிக்கப்பட்டது.

14) போடிநாயக்கனூர் சட்டமன்றத் தேர்தல் பணிக்கு நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளுக்குரிய பாகம் எண்.38 முதல் பாகம் எண்.108வரையிலான 71 பாகங்களில் வாக்காளர் சுருக்கத் திருத்தம் 2020–ன்படி படிவங்கள்–6, 7, 8, மற்றும் 8A பெறப்பட்டுள்ளது. மேற்படி படிவங்களை கணனியில் பதிவு செய்து வழங்குவதற்காக 21–01–2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை( படிவம் ஒன்றிற்கானது ) |
|---|---|---|
| 1. | திரு.ஜே.பிரகதீஸ்குமார்,<br>Date Operator. போடிநாயக்கனூர் | ரூ.15.00 |
| 2. | திரு. ச.முருகன்,<br>பழனி ஆண்டவர் ஜெராக்ஸ் சாப் போடிநாயக்கனூர் | ரூ.18.00 |
| 3. | திரு.முத்து,<br>கம்யூட்டர்ஆப்ரேட்டர்<br>போடிநாயக்கனூர் | ரூ.28.00 |

அலுவலகக்குறிப்பு:- 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தேர்தல் பணியின் அவசர அவசியத்தினை கருதி, நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று, குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்.1–ல் கண்டுள்ள திரு.ஜே.பிரகதீஸ்குமார் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கியதையும், தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.853/2019/எப்1)**
**தீர்மான எண் : 61** குறைந்த விலைப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.

15) இந்நகராட்சிக்குட்பட்ட பேரூந்து நிலையத்தில் வடமேற்கு பகுதி, பேரூந்து நிலையத்தில் பேரூந்து நிலைய பழைய தங்கும் விடுதி, பழைய பொறியாளர் குடியிருப்பு மற்றும் ஆடடி மனை ஆகியவைகளை மாற்றியமைக்கப்பட்டு கடைகளாக கட்டப்பட்டு ஏலம் விடப்பட்டதில் அதிக தொகைக்கு ஏலம் கோரியவர்கள் வசம் கடைகள் ஒப்படைக்கப்பட்டதில் ஏலம் எடுத்தவர்கள் கடைக்குரிய மாதவாடகை தொகைகளை செலுத்தாமல் இருந்தால் கடையினை நிர்வாகத்தின் மூலம் அடைக்கப்பட்டு, அந்த கடைகள் மற்றும் ஏலம் போகாத கடைகளுக்கு 21 முறை ஏல நடவடிக்கை மேற்கொண்டு 22வது முறையாக 2019–2020ம் ஆண்டிற்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை தேனி மாவட்ட அளவில் விளம்பரம் செய்தமைக்கும் மற்றும் ரத்து செய்தமைக்கான மாலை தமிழகம் நாளிதழின் பட்டியல் தொகை ரூ.71,400/–க்கு வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** இந்நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை மாலை தமிழகம் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கும் மற்றும் ரத்து செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.71,400/–ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**(ந.க.எண்.3829/2014/அ2)**
**தீர்மான எண் : 62** அனுமதிக்கப்பட்டது.

**16)** போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான 7வது,10வது மற்றும் 15வது நகரவைப்பள்ளிகளில் பழுது பணிகள் செய்வதற்கு 27.02.2020–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1 M/s.கே.ஏ.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ்,
தேனி.

2 M/s.யோகேஸ், எலெக்ட்ரிக்கல்ஸ்,
தேனி.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் சரிபார்க்கப்பட்டு, தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான 7வது,10வதுமற்றும் 15வது நகரவைப்பள்ளியில் பழுது பணிகள். | 10.00/– | 1. M/s. கே.ஏ.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ், தேனி. | 0.39% மதிப்பீட்டை விடகுறைவு |
| | | | 2. M/s.யோகேஸ், எலெக்ட்ரிக்கல்ஸ், தேனி. | 4.51% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.39% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. கே.ஏ.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ், தேனி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் இப்பணிக்கான ஆகும் செலவினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்:375/2020/இ1)**

**தீர்மான எண் : 63** குறைந்த ஒப்பந்தப்புள்ளிஅனுமதிக்கப்பட்டது.

17) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கு குழாய் உதிரிபாகங்கள் வாங்குதல் பணிகள் செய்வதற்கு 27.02.2020–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1 M/s.கே.ஏ.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ்,
தேனி.

2 M/s.யோகேஸ், எலெக்ட்ரிக்கல்ஸ்,
தேனி.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் சரிபார்க்கப்பட்டு, தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்கு குழாய் உதிரி பாகங்கள் வாங்கும் பணிகள். | 10.00/– | 1. M/s. கே.ஏ.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ், தேனி. | 0.68% மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | 2. M/s.யோகேஸ் எலெக்ட்ரிக்கல்ஸ், தேனி. | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. யோகேஸ், எலெக்ட்ரிக்கல்ஸ், தேனி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் இப்பணிக்கான ஆகும் செலவினை குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்:379/2020/இ1)**

**தீர்மான எண் : 64** குறைந்த ஒப்பந்தப்புள்ளிஅனுமதிக்கப்பட்டது.

18)போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்.33வது புதிய காலனி தெரு எண்.2ல் ஜேஜே மஹால் அருகில் இரண்டு மரம் காய்ந்து பட்டுபோய் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. மேலும் பொதுமக்களுக்கு ஆபத்தான நிலையில் உள்ளதால் மரங்களை வெட்டி எடுத்துக்கொள்வதற்கு, 16.03.2020 மாலை 4.00 மணியளவில் பொது ஏலம்விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.884/2020/இ1)**

**தீர்மான எண் : 65** அனுமதிக்கப்பட்டது.

19) அரசாணை எண் 30(143)/86/D ,நாள்.02.07.1987ன் படி திரு.N.இராதகிருஷ்ணன், போடிநாயக்கனூர் என்பவர் தான் முன்னாள் ராணுவ வீரர் என்பதால் சொத்துவரி செலுத்த விலக்கு அளிக்க கோரி வரப்பெற்ற விண்ணபத்தின் மீது நகராட்சி மூலம் சட்டக்கருத்து கோரப்பட்டதில் திரு.B.R.பாலமுரளி, B.B.A., B.L., அரசு வழக்கறிஞர் ,போடிநாயக்கனூர் என்பவர் சட்டக்கருத்துரு வழங்கியமைக்கு தனது 25.02.2020ம் தேதிய கடிதத்தில் சட்டக்கருத்து கட்டணமாக ரூ.2000/– வழங்க கோரியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** அனுமதிக்கலாம்.
**ந.க.எண் :0509/2020/அ1**
**தீர்மான எண் : 66** அனுமதிக்கப்பட்டது.

20)போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்.1, கதவு எண்.52ஏ, சௌந்திரவேல் தெருவில் உள்ள சொத்துவரி விதிப்பு எண்.620னை தேனி, சார்பு நீதிமன்ற வழக்கு எண்.66/2009 முதல்நிலை தீர்ப்பாணை நாள்.21.12.2018ன்படி திரு. J.சாமுவேல்ஜெபராக்வேதமுத்து என்பவர் பெயரிலிருந்து திரு.V.ஜெயபாலன் என்ற பெயருக்கு நீதிமன்ற உத்தரவின்படி பெயர் மாற்றம் செய்ய கோரி வரப்பெற்ற விண்ணபத்தின் மீது பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக நகராட்சி மூலம் சட்டக்கருத்துரு கோரப்பட்டதில் திரு.B.R.பாலமுரளி, B.B.A., B.L., அரசு வழக்கறிஞர் ,போடிநாயக்கனூர் என்பவர் சட்டக்கருத்து வழங்கியமைக்கு தனது 25.02.2020ம் தேதிய கடிதத்தில் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.2000/– வழங்க கோரியுள்ளார். சட்டக்கருத்து கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** அனுமதிக்கலாம்.
**ஒ.மு.எண் :151/2020/அ1**
**தீர்மான எண் : 67** அனுமதிக்கப்பட்டது.

21)போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான பழைய மற்றும் புதிய நீர்வடிநிலையத்தில் உள்ள படிமான தொட்டிகளை கழுவி சுத்தம் செய்வதற்கான 1000கி.கி பிளிச்சிங் பவுடர் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/–ஐ குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.612/2020/இ1)**
**தீர்மான எண் : 68** அனுமதிக்கப்பட்டது.

22)போடிநாயக்கனூர் நகராட்சி தலைமைக் குடிநீர் நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பதற்கு தேவையான ஆலம் கையிருப்பு குறைவாக இருப்பதால், குடிநீர் பணியின் முக்கியத்துவம் கருதி ஆலம் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.2,50,000/–ஐ குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.778/2020/இ1)**
**தீர்மான எண் : 69** அனுமதிக்கப்பட்டது.

23) போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகான விழிப்புணர்வு நோட்டிஸ், பேனர்கள் அடிக்கவும், கிருமி நாசினிகள் வாங்கவும், பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கவும், சென்சார் கருவிகள் வாங்கவும், மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 2,00,000 ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கூடுதல் செலவினங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0956/2020/H2)**
**தீர்மான எண் : 70** அனுமதிக்கப்பட்டது.

24) போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் இயங்கிவரும் 12 வாகனங்களை போதுமான ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தால் TEXCO நிவனம் மூலம் ஏற்கனவே பணிரிந்து வரும் 4 ஓட்டுநர்களுடன் சேர்த்து மேலும் 2 ஓட்டுநர்களை பணியமர்த்தவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 6,00,000 ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.548/2020/H2)**
**தீர்மான எண் :71** அனுமதிக்கப்பட்டது.

25) போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TATA ACE வாகனம் TN60S1992 க்கு தகுதிச்சன்று முடிவடைந்து விட்டதால் மேற்கொண்டு தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை தனியார் நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தபுள்ளி கோரி நீக்கம் செய்யவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 1,00,000 ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு:**
மேற்கண்ட வாகனத்திற்க்கு தகுதி சான்று பெறுவதற்கான கூடுதல் செலவினங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.321/2020/H2)**
**தீர்மான எண் : 72** அனுமதிக்கப்பட்டது.

26) இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களாக பணிபுரியும் திரு.பாலகிருஷ்ணன் மற்றும் 3 நபர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கில் மேற்படியாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளதில் மேல்முறையீடு மற்றும் மறுசீராய்வு (Rev.Appln 53 of 2019) நகராட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டதிலும் திரு.பாலகிருஷ்ணன் மற்றும் 3 நபர்களுக்கு சாதகமாக 24.01.2019 ல் தீர்ப்பாகியுள்ளது. அதன்மீது, உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்வது குறித்து ந.க.எண்:2760/2012/எச்1 நாள்:23.12.2019ல் திரு.I.கணேசன், அரசு வழக்கறிஞர் டெல்லி உச்சநீதிமன்றம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி வழக்கறிஞரின் 13.01.2019 ஆம் தேதிய கடிதத்தில் வழக்கு தொடர்பான ஆவணங்களுடன் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கு கீழ்க்காணும்படி கட்டணம் கோரியுள்ளார்,

| **Particulars** | **:** | **Amount** |
|---|---|---|
| Towards legal fee for filing expenses, Preparing fair and final Special leave petition | : | 30,000 |
| Vakalat fee | : | 15,000 |
| Legal incidental expenses | : | 5,000 |
| **Total** | **:** | **50,000/-** |

மேற்படி சீராய்வு மனு Rev.Appln 53 of 2019-யின் தீர்ப்பின்மீது உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு மேற்கொள்ளும் பொருட்டும், இப்பொருள் தொடர்பாக அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்யுள்ளதாலும், வழக்கின் அவசர அவசியம் கருதி திரு.I.கணேசன், அரசு வழக்கறிஞர்,

உச்சநீதிமன்றம், டெல்லி அவர்களுக்கு ரூ.50000/—(ஐம்பதாயிரம் மட்டும்) தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.2760/2012/எச்1)**
**தீர்மான எண் : 73** அனுமதிக்கப்பட்டது.

27) இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களாக பணிபுரியும் திரு.சுருளி என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கில் மேற்படியாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளதில் மேல்முறையீடு மற்றும் மறுசீராய்வு (Rev.Appln 93 of 2018) நகராட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டதிலும் திரு.சுருளி என்பவருக்கு சாதகமாக 31.07.2018 ல் தீர்ப்பாகியுள்ளது. அதன்மீது, உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது குறித்து ந.க.எண்:2760/2012/எச்1 நாள்:23.12.2019ல் திரு.I.கணேசன், அரசு வழக்கறிஞர் டெல்லி உச்சநீதிமன்றம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி வழக்கறிஞரின் 13.01.2019 ஆம் தேதிய கடிதத்தில் வழக்கு தொடர்பான ஆவணங்களுடன் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கு கீழ்க்காணும்படி கட்டணம் கோரியுள்ளார்,

| Particulars | : | Amount |
|---|---|---|
| Towards legal fee for filing expenses, Preparing fair and final Special leave petition | : | 30,000 |
| Vakalat fee | : | 15,000 |
| Legal incidental expenses | : | 5,000 |
| **Total** | : | **50,000/-** |

மேற்படி சீராய்வு மனு Rev.Appln 93 of 2018-யின் தீர்ப்பின்மீது உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு மேற்கொள்ளும் பொருட்டும், இப்பொருள் தொடர்பாக அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்யுள்ளதாலும், வழக்கின் அவசர அவசியம் கருதி திரு.I.கணேசன், அரசு வழக்கறிஞர், உச்சநீதிமன்றம், டெல்லி அவர்களுக்கு ரூ.50000/—(ஐம்பதாயிரம் மட்டும்) தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.2760/2012/எச்1)**
**தீர்மான எண் : 74** அனுமதிக்கப்பட்டது.

28) போடிநாயக்கனூர் நகராட்சியில் புதிய திட்டப்பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்ய கட்டிட வடிவமைப்பு (design) செய்ய வேண்டி உள்ளது. மேலும் புதிய கட்டிடங்களுக்கு இரும்பு கூரை அமைக்கும் பொழுது அதற்கு வடிவமைப்பு செய்ய வேண்டி உள்ளது. மேற்படி பணிகளை தனியார் வடிவமைப்பு பொறியாளர் மூலம் மேற்கொள்வதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30000/—ஐ பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.956/2020/இ1)**
**தீர்மான எண் : 75** அனுமதிக்கப்பட்டது.

29) போடிநாயக்கனூர் நகராட்சி 29வது வார்டு அரண்மனைத்தெருவில் சர்வே வார்டு—2, பிளாக் எண்—3, சர்வே எண். 149 மற்றும் 151/2ஏ—ல் உள்ள இடத்தில் அடிப்படை வசதி செய்து தரக்கோரிய இடத்தின் மீது நீதிமன்றத்தின் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில் (ந.க.எண்5905/2019/எப்1) அடிப்படை வசதிகள் செய்ய சட்டக் கருத்துரு கோரியதற்கும், திருமலாபுரம் ஒழுகால் பாதையில் பாலம் அமைத்து தருவதற்கு மேற்படி பாதை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் (ந.க.எண்5776/2019/எப்1) மேற்படி பாதையில் பாலம் அமைப்பது தொடர்பாகவும், இந்நகர்மன்ற நியமன வழக்கறிஞர் திரு.பி.ஆர்.பாலமுரளி என்பவரின் சட்டக்கருத்துரு கோரப்பட்டது. மேற்படி சட்டக்கருத்துரு வழங்கியமைக்கு கட்டணமாக தலா ரூ.2000/— வீதம் இரண்டு சட்டக்கருத்துகளுக்கு ரூ.4000/—ஐ வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை திரு.பி.ஆர்.பாலமுரளி வழக்கறிஞருக்கு வழங்கவும், மேற்படி செலவினத் தொகையினை 2019—2020 ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** ஒப்புதல் அளிக்கலாம்.
**(ந.க.எண்.5905/2020/எப்1)**

**தீர்மான எண் : 76** அனுமதிக்கப்பட்டது.

30) இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் பணியிடம் 146 தவிர அரசாணை எண் 101 ,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,நாள்.30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர் அளவுகோலின்படி 270 பணியிடங்கள் தேவைப்படுவதால் 54 பணியிடங்களை திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.267. நாள்.30.06.2015ல் ஒப்புதல் பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித எண்.16096/பி3/2016. நாள்.27.06.2016ல் உரிய அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் அவர்லேண்ட இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,சென்னை நிறுவனத்திற்கு 01.09.2018 முதல் 31.08.2019 முடிய ஒராண்டு காலத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் பணி காலம் 31.08.2019 உடன் முடிவடைந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.501. நாள்.30.08.2019ல் பொதுசுகாதார பணிகளின் அவசியம் கருதி மேலும் மூன்று ஆண்டுகளுக்கு தேவைப்படுவதால் 54 பணியிடங்களை திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் தனியார்மயம் மூலம் பணியமர்த்தி பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் 01.09.2019 முதல் 29.02.2020 வரையிலான ஆறு மாத காலத்திற்கு 54 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும் ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 16.09.2019 மற்றும் 17.12.2019 ஆகிய தேதிகளில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் நாளது தேதி வரை உத்திர வராததாலும் கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள தமிழக அரசு உத்திரவிட்டதாலும் பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி 01.03.2020 முதல் 30.04.2020 வரை இரண்டு மாத காலத்திற்கு பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள பணி நீடித்து உத்தரவு வழங்கவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.18லட்சத்தினை 2019–2020ம் ஆண்டுக்கான நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் உரிய பின்னேற்பு பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.3777 /2019/எச்2)**
**தீர்மான எண் : 77** அனுமதிக்கப்பட்டது.

31) இந்நகராட்சி வார்டு எண்:25 சுந்தரபாண்டியன் தெரு தினசரி மார்கெட் அருகில் புதிதாக சிறுபாலம் கட்டுவதற்கான பணிகள் செய்வதற்கு 18.02.2020–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. திரு.எல்.எல்லப்பன், ஒப்பந்ததாரர்
   போடிநாயக்கனூர்.
2. திரு. ப.நடராஜன், ஒப்பந்ததாரர்
   போடிநாயக்கனூர்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் சரிபார்க்கப்பட்டு, தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி வார்டு எண்:25 சுந்தரபாண்டியன் தெரு தினசரி மார்கெட் அருகில் புதிதாக சிறுபாலம் கட்டுவதற்கான பணி | 1.50/– | 1. திரு. எல்.எல்லப்பன், ஒப்பந்ததாரர், போடிநாயக்கனூர். | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | 2. திரு. ப.நடராஜன், ஒப்பந்ததாரர், போடிநாயக்கனூர். | 0.64% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.10%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **திரு.எல்.எல்லப்பன்**, ஒப்பந்ததாரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் இப்பணிக்கான ஆகும் செலவினை குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்:548/2020/இ1)**

**தீர்மான எண் : 78** குறைந்த ஒப்பந்தப்புள்ளிஅனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி